**செய்தி வெளியீடு எண்: 082** **நாள்: 01.02.2018**

# <u>செய்தி வெளியீடு</u>

## அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு திங்கள்தோறும் உதவித் தொகை வழங்கும் திட்டம்

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் 2018—2019 ஆம் ஆண்டிற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பிக்கத் தகுதிகள்: 01.01.2018 ஆம் நாளன்று 58 வயது நிறைவடைந்திருக்க வேண்டும். ஆண்டு வருவாய் ரூ.72,000/—க்குள் இருக்க வேண்டும். வயது, வலைத்தளம் வாயிலாக (ஆன்லைன்) பெறப்பட்ட வருமானச் சான்று, தமிழ்ப்பணி ஆற்றியமைக்கான ஆதாரங்கள் மற்றும் தமிழ்ப்பணி ஆற்றி வருவதற்கான தகுதிநிலைச் சான்று தமிழறிஞர்கள் இரண்டு பேரிடம் பெற்று விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். இதற்கான விண்ணப்பப்படிவம் நேரிலோ அல்லது தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்திலோ (www.tamilvalarchithurai.com) இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்படுபவருக்கு திங்கள் தோறும் உதவித்தொகையாக ரூ.2500/—, மருத்துவப்படி ரூ.100/— மற்றும் கட்டணமில்லா பேருந்துச் சலுகையும் அவரின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும். விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய **கடைசி நாள்: 30.6.2018.** விண்ணப்பங்களைப் பெறுதல் மற்றும் அனுப்ப வேண்டிய முகவரி

**தமிழ் வளர்ச்சி இயக்குநர்,**
**தமிழ் வளர்ச்சி இயக்ககம்,**
**தமிழ் வளர்ச்சி வளாகம், முதல் தளம்**
**தமிழ்ச் சாலை, எழும்பூர்,**
**சென்னை—600 008**
**தொலைபேசி எண். 044 – 28190412**
**044 – 28190413**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**